களுக்கு ஈவதையும் பகிரங்கமாய் இஸ்லாத்தின் நன்மை காகச் சகாயம் செய்வதையும் இந்த ஆயத்து விளக்குகிறது. இஸ்லாத்துக்கு இப்போது மிக்க இடுக்கான கால சம்பவித்திருப்பதால் அதன் முன்னேற்றத்துக்காக உங்ளாலியன்றதை உதவுங்கள், உதவுங்கள், உதவுங்கள்.

யதார்த்தவாதி வெகுஜன விரோதிதான். ஆயினு இதன் மற்ற விவரங்கள் பின்னொருமுறை இன்னும் ஸ்பஷ்டமாக எழுதப்படும்.

கமலம் 2 1—10—20 இதழ் 9,

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

மனிதருக்கேற்ற மாதிரி.
(AN EXCELLENT EXEMPLAR & A PERFECT MODEL)

"அல்லாஹுத் தஆலாவின் ரஸூலிடத்தில் நிச்சமாக உங்களுக்கு ஒரு நேர்த்தியானமாதிரி இருக்கிறது (அல்குர்ஆன்,33·21).

மானிட வர்க்கத்தார் இவ்வுலகில் மேன்மைபெ வேண்டுமாயின் அவர்களுக்கு ஒருவர் மாதிரி (நமூனு) காட்டவேண்டும். அப்படியாயின் இவ்வுலகத்தவருக்கேற்ற யானமாதிரியென்றுயாரைநாம்சொல்வது?உலகத்திலுள் ஒவ்வொரு மதத்தினரும் தம் தம்முடைய மதத் தலைவ

"மனிதருக்கேற்ற மாதிரி" யென்று சொல்லிக்கொள்ளு கின்றனர். எந்த மதத்தலைவராயிருப்பினும் யாரால் மனித கோடிக்கு மிகுதமான நன்மை யுண்டாகிறதோ அவர் தான் நமக்குத் தகுந்த மாதிரியாவார். அவரால் மனிதவர்க் கத்துக்கு அளவு கடந்த வெற்றியும் நன்மையும் உண்டாவ தல்லாமல் அவரை ஒரு லக்ஷியமாக வைத்துக்கொண்டு அவருடைய மாதிரியை உலகத்தவர் பின்பற்றி நடப்ப தற்கும் அவர் பிரயோசனமாயிருத்தல் வேண்டும். மனித னிடத்தில் கடவுள் எவ்வளவு அபரிமிதமான சக்தியை யமைத்திருக்கிறாரோ அவ்வளவையும் வெளிப்படுத்தி அவனை அபாரவெற்றி யடையும்படி செய்வதற்கு வேண் டிய எளிய முறைகளையெல்லாம் நமக்கு மாதிரியா(Exem- plar) யிருப்பவர் காண்பித்தல்வேண்டும். இவ்வுலகில்ஜன்ம மெடுத்ததன் பயனாக நாம் அடையவேண்டிய எல்லா நன் மைகளையும் பெறுதற்குரிய ஞானமார்க்கத்தையும் அவர் விளக்கிக்காட்டி யிருத்தல் வேண்டும். சுருங்கச்சொல்லு மிடத்து நாம் இவ்வுலகில் மகாபெரிய சுகத்தையும் அளவு கடந்த ஜயத்தையும் அடையும்படியான உற்சாகம் நிறை ந்த எளிய வழியைக் காட்டக்கூடியவரே எமக்கு ஓர் இணை யற்ற வழிகாட்டியாகவும் நேர்த்தியான முன்மாதிரியாக வும் (Ideal model) இருத்தல்கூடும். மனிதருக்கேற்ற இப்படிப்பட்ட மாதிரியாக (நமூனாவாக)இருப்பவர் யார்?

இவ்வுலகில் காணப்படும் வெவ்வேறு மதத்தினரும் மனிதன் அடையவேண்டிய "மகா பெரியசுகத்தையும் அளவு கடந்த வெற்றியையும்" பற்றிச் சொல்லும்போது வெவ்வேறு விதமாய் அப்பதங்களுக்கு வியாக்கியானம் செய்கின்றனர்; "நமக்கு எண்ணிறந்த ஜன்மங்களுண்டு; நம்முடைய முந்திய பல ஜன்மங்களிலும் நாம் செய்திருக்

கும்.தீய கருமங்களையும் இந்த ஜன்மத்தில் செய்யும் அப்படிப்பட்ட தீய கருமத்தையும் ஒழித்துவிட்டு மிச்சம் ஒன்றுமில்லாம லிருக்கும்படி நம்மைச் செய்துகொள்ள வேண்டியதே நாம் இவ்வுலகில் அடையவேண்டிய மகா பெரிய சுகம்; அதுதான் அளவு கடந்த வெற்றி," என்று சிலர் தாத்பரியப்படுகின்றனர். இன்னும் சிலர் இவ்வாறு சொல்கின்றனர்: 'நம்முடைய முதற் பிதாவும் மாதாவும் பாம்பின் சூழ்ச்சியால் பாபம் செய்து விட்டனர்; அப்பாபம் அவர்களுடைய பின் சந்ததியான நம்மை யெல்லாம் பற்றிக்கொண் டிருக்கிறது; இப்பாபத்தைப் போக்கிக்கொண்டு இரக்ஷண்யம் பெறுவதுதான் இவ்வுலகில் நாம் பெற வேண்டிய பெரியஜயமென்றும் பேரானந்த மென்றும் கருதவேண்டும்.' இவ்விரு கக்ஷியாரின் கொள்கைப்படி மனிதன் பிறக்கும்போதே தன்னால் சுமக்கமுடியாத பெரிய கருமச்சுமையையும் பாப மூட்டையையும்தாயின் வயிற்றிலிருந்தே கொண்டுவருகிறான்; இப்படிப்பட்ட தீய கருமத்தையும் கொடிய பாபத்தையும் போக்கிக்கொண்டு முக்தியையையும் இரக்ஷண்யத்தையும் அடைவதேமனிதனுடையமகாபெரிய ஜயமென்பது அவர்களின் அபிப்பிராயம். இப்படி அவர்கள் சொல்வது சற்றேனும் நம்முடைய புத்திக்குப் பொருத்தமா யிருக்கிறதோ வென்று நிதானித்துப்பாருங்கள். அவர்களுடைய கொள்கையின்படி இவ்வுலகில் நாம் பிறக்கும்போதே கருமக்கூட்டத்தையும் பாபச் சுமையையும் நம்முடைய தலையில் சுமந்துகொண்டு வருகிறோம்; ஆதலின் இவ்வுலகில் நாம்செய்யும் ஒவ்வொருகாரியமும் அது நன்மையாயிருந்தாலும்தீமையாயிருந்தாலும் நம்முடைய பழய பாபத்தின் தூண்டுதலாலும்முன்ஜன்மக்கருமத்தின் பாசத்தாலுமே செய்யப்படுகிறதென்று நாம் ஒத்

துக்கொள்ளவேண்டும். ஆகவே நம்முடைய இந்த ஜன்மக்காரியங்களெல்லாம் முந்திய பாபத்தினுலும் கருமத்தினுலுமே நம்மால் செய்யப்படுகின்றனவே யொழிய நாமே சுயமாக ஒன்றையும் செய்யவில்லை. இக்கொள்கையின் முடிவின்படி நாம் தீர்க்காலோசனைசெய்து பார்ப்போமாயின் நாம்செய்யும் யாதொரு காரியத்துக்கும் நாம் ஜவாப்தாரியாகஇருப்பது முடியாது. பழய பாபமும் முந்திய கருமமும் என்னை ஆட்டிவைப்பதுபோல் நான் என் காரியங்களைச் செய்து வருகிறேனே யொழிய நானே சுயமாக ஒன்றையும் செய்யவில்லை. இது இறைவனுடைய சட்டம். ஆதலின் என்னுடைய நல்ல செய்கைக்கும் தீய செய்கைக்கும் நான் ஜவாப்தாரியல்ல. இக்காரணத்தால் என் நன்மைக்கு ஆண்டவன் சன்மானம் கொடுக்கவும் என் தீமைக்காக ஆண்டவன் தண்டனை விதிக்கவும் தேவையில்லை. நான் செய்யும் ஒவ்வொரு தீமையும் ஆண்டவனுடைய சட்டத்தின்படியே செய்கிறேன். ஆதலின் ஆண்டவன் என்னைத் தண்டிப்பது நியாய விரோதமேயாகும். நான் பிறக்கும்போதே ஆண்டவன் எனக்குக் கண் காது மூக்கு வாய் முதலிய இந்திரியங்களைக் கொடுத்திருக்கிறான்; அவற்றின்படி நான் தொழில் செய்கிறேன்; இந்த இந்திரியங்களைப் போலவே இறைவன் எனக்கு ஜனன காலத்திலேயே பாப மூட்டையையும் கருமச்சுமையையும் என் தலையில் சுமத்தியிருக்கிறான். இதனால் என் செய்கைக்கு நான் ஜவாப்தாரியாக மாட்டேன். ஹிந்து சகோதரர்களும் கிறிஸ்தவ நண்பர்களும் சொல்வதைக் கேட்டால் மேலேசொன்ன முடிவுதான் வருகிறது.

பிறக்கும்போதே என்னுடன் கூடப்பிறந்த பாபத்தையும் கருமத்தையும் நான் எவ்வாறு ஒழிக்க முடியும்?

பாப வலையிலும் கரும பாசத்திலும் சிக்கிக்கொண்டு நான் அவற்றின் போக்கில் இழுத்துக்கொண்டு போகப்படும் போது என்றால் அவற்றினின்றும் விலகிக்கொள்ள எப்படி முடியும்? அப்படி விலக்கிக்கொள்ள நான் ஏதேனும் உபாயம் தேடுவேனாயின் அது ஆண்டவனுடைய அமைப்புக்கு விரோத மாகவல்லவோ முடியும்? ஆண்டவனுடைய சட்டப்படி எனக்குப் பாபமும் கருமமும் பிறவியிலேயே அமைந்திருக்கும் போது அச்சட்டத்துக்கு முரணாய் நான் எங்ஙனம் நடப்பேன்? அஃதெவ்வாறு சாத்தியமாகும்! ஆண்டவனுடைய கட்டளையின்படியே நான் இவ்வுலகில் தீமைகளையெல்லாம் செய்யும்போது நான் ஏன் அதற்காக வருந்தவேண்டும்? பிறரும் ஏன் என்மீது குற்றம் சாட்ட வேண்டும்? இப்படிப்பட்ட அசம்பாவிதமான அஸ்திவாரத்தின்மீது அமைக்கப்பட்ட மதமும் அசம்பாவிதமாகவே காணப்படுகின்றது. "வாஸ்தவம்தான்; நீங்கள் சொல்வது போல் நான் பிறக்கும்போதே பாபமூட்டையையும் கருமக்குவியலையும் என்தலைமேல் சுமந்துகொண்டே பிறந்ததாய் நான் ஒத்துக்கொள்ளுகிறேன்; அப்படிப்பட்ட பாபத்தினின்றும் கருமத்தினின்றும் தப்புவதெப்படி?" என்று கேட்டால் அம்மதத்தினர்கள் என்ன வழிகாட்டுகிறார்கள்? "கடவுளிடத்தில் பக்தியைச்செலுத்தி நாம் நற்கருமங்களைச் செய்துவருவோமாயின் தீயகருமமெல்லாம் ஒழியும்," என்று சொல்கின்றனர். உண்மைதான். என்னுடைய நன்மை தீமை ஆகிய எல்லாக்காரியங்களும் கடவுளின் சட்டமாகிய என்பழைய கருமபாசத்தின் பயனாய் விளையும்போது நான் அப்பாசத்தைவிட்டு எவ்வாறு விலக்கிச் சுயேச்சைபெற முடியும்? தெய்வபக்தியால் என்னுடைய தீயகருமத்தை விட்டுவிலகி அத்தீமையையொழிக்கத்தக்க

நன்மையைச்செய்ய எனக்குச் சக்தியுண்டாகுமாயின் அதே தெய்வபக்தியால் நற்கருமம் செய்யாமலே என்னுடைய தீயகருமத்தையெல்லாம் போக்கிக் கொள்ளமுடியாதா? "நற்கருமம் செய்யாமல் எல்லாத்தீக்கருமங்களையும் தெய்வபக்தியால் போக்கிக்கொள்வது முடியாது; ஆனால் தீக்கருமங்களைப் போக்குவதற்கு வேண்டிய நற்கருமங்களைச் செய்தற்கு அவசியமான சுயேச்சையைமட்டுந்தான் நம்முடைய் தெய்வபக்தியால் அடைதல் முடியும்," என்பீர்களாயின் அது நம்முடைய புத்திக்குப்பொருத்தமாய்க் காணப்படவில்லை. கருமபாசத்தினின்றும் விலகிக்கொள்ள நம்முடைய தெய்வபக்தி பிரயோசனப்படக்கூடும் என்பது உண்மையாயின் நற்கருமம் செய்யாமலே தீயகருமங்களையெல்லாம் நிவர்த்திசெய்துகொள்ளவும் அதேபக்திபோதுமானதாயிருத்தல் வேண்டும். தெய்வபக்தியால் மட்டும் தீயகருமமெல்லாம் நீங்கிப்போவதாயின் மனிதனுடைய நிலைமை மிகக்கேவலமான கதிக்குத்தான் வந்துவிடும்; அதாவது, பாபகாரியங்களைச் செய்யுமட்டும் மனிதர்கள் அப்பாபத்துக்குத்தாம்ஜவாப்தாரியல்லவென்றும் எல்லாம் தேவசட்டமான கருமத்தின் பயனாகத்தான் நடக்கிறதென்றும் சொல்லிக்கொண்டேவந்து கடைசியில் அப்பாபமெல்லாம்தெய்வகடாக்ஷத்தால் பறந்துவிடுமென்றும் நம்பலாரம்பிப்பார்கள். அப்பொழுது பாபம் செய்வதெல்லாம் மனிதன் தொழிலென்றும் அதை மன்னிப்பதெல்லாம் தெய்வப் பொறுப்பென்றும் ஆய்விடும். மனிதன் தான் செய்யும் காரியங்களுக்குத் தானேஜவாப்தாரியென்னும் உணர்ச்சியே இவ்வுலகில் இல்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட நிலைமையானது மிகவும் வெறுக்கத்தக்கதாகவே காணப்படும்; மனிதகோஷ்டிக்கு அதனால் அதிக தீமை

யைத்தவிர வேறொன்றும் விளையாது. பாபமூட்டையுடன் நாம் பிறக்கிறோமென்று வாதிப்பவர்கள், "ஏசுநாதர் 2000 வருஷங்களுக்கு முன்னே உங்களுடைய பாபத்தை யெல்லாம் ஏற்றுக்கொண்டு சிலுவையில் அறைபட்டார்; அதை நீங்கள் நம்புங்கள்; பிறகு உங்களுக்கு இரக்ஷண்யம் கிட்டும்," என்கின்றனர். இஃதென்ன அசம்பாவிதமானகொள்கையாயிருக்கிறது! சாதாரண புத்திக்குக்கூட இது அருவருப்பாய்க் காணப்படவில்லையா? தமக்குப்பின்னே பன்னெடுங்காலங்கழித்து ஜனனமெடுக்கப்போகிற மனிதர்களின் பாபத்தையெல்லாம் 2000 வருஷங்களுக்கு முன்னேயே ஏசு நாதர் ஏற்றுக்கொண்டு சிலுவையில் அறைபட்டாரென்று நம்புகிறதாம்! உடனே நம்முடைய பழய பாபமெல்லாம் பஸ்பமாய்ப் பறந்துவிடுகிறதாம்!! இஃதென்ன விந்தை!!! மனிதர்களுடைய நன்முயற்சியையும் நாகரீகப்பெருமையும் போக்குவதற்கு இதைக்காட்டினும் இன்னொரு எமன் வேண்டுமோ?

இன்னும் சில மனிதர்கள் சொல்லுவதாவது: நம்முடைய அறிவிற்கோ அல்லது வேறொரு அம்சமான தன்மைக்கோ ஆனந்தம் விளையும்படி செய்வதே மனிதன் இகலோகத்தில் செய்யவேண்டிய முதற்கடமை யென்கின்றனர்; ஆனால் மனிதர்களிடத்தில் அறிவைப்போன்றவும் அதற்குமேலானவுமான அநேக அம்சங்கள் இருக்கின்றன; அவற்றுள் ஓர் அம்சத்துக்குமட்டும் ஆனந்தம் வரச்செய்தல் மனிதனுடைய உண்மையான வெற்றியைக் காட்ட மாட்டாது. ஆதலின் நமக்கு மாதிரியாக இருக்கக்கூடிய ஒருவர் மனிதனுடைய சகல அம்சங்களுக்கும் ஆனந்தத்தைக்கொடுத்து எல்லாவிஷயத்திலும் நம்மை வெற்றிபெறும்படி செய்தல்வேண்டும். மனிதனுடைய

இயற்கைக்கு ஒத்தவாறு நமக்கு அவர் வழிகாட்ட வேண்டும்; நம்முடைய சுபாவத்துக்கு நேர்மாறான வழிகளை யெல்லாம் போதிப்பவர் "மனிதனுக்கேற்ற மாதிரி" யாக இருப்பது முடியாது. மனிதர்களும் மற்றப்பொருள்களும் நிறைந்துள்ள இவ்வுலகில் இறைவனது சட்டம் எவ்வாறு தொழில்செய்கிறதென்று நாம் சற்று ஆராய்ச்சி செய்வோமாயின், இப்பூவுலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் தன்னிடத்தில் அமைந்து கிடக்கும் அந்தரங்க அபார சக்தியை யெல்லாம் வெளிக்கிளப்பி அவ்வவ்வஸ்துவும் தன்னால் கூடியமட்டும் முழுவெற்றியும் அடையப்பார்க்கின்றது, என்னும் உண்மை வெளியாகும். உதாரணமாக ஓர் ஆலின் வித்தைக்கவனிப்போம்: அச்சிறு விதையில் எவ்வளவு அபாரமான சக்தி அந்தரங்கமாக நிறைந்திருக்கிறதென்று ஆராய்வோமாயின், "தெள்ளிய ஆலின் சிறுபழத் தொரு விதை, தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன் சினையினும், நுண்ணிதேயாயினும் அண்ணல் யானை, அணிதேர்புரவி ஆட்பெரும் படையொடு, மன்னர்க்கிருக்க நிழலாகும்மே," என்று சொல்லத்தக்க அவ்வளவு சக்தியையும் அச்சிறு விதை தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சிறு ஆலின் வித்தைப் பூமியில் போட்டவுடன் அது தன்னுடைய முழுச் சக்தியையும் வெளிக்காட்டித் தன்னால் எவ்வளவு பிரம்மாண்டமான மரமாக முடியுமோ அதற்கு வேண்டிய எல்லாப் பிரயத்தனமும் அவ்விதை செய்கின்றது. விதையின் தன்மையானது தனக்கு வசதியான பிரமயம் நேரும்போது தன் சக்தி முழுதையும் வெளிக்காட்டிப் பூராவெற்றியும் அடையவேண்டியது தான். இரகசியமான இவ்வுண்மையைத்தான் இவ்வுலகிலுள்ள எல்லாவஸ்துக்களிலும் காண்கிறோம். இவ்வாறு

இருக்கும்போது மனிதன் மட்டும் அச்சட்டத்துக்கு மாற்றமாயிருத்தல் கூடுமோ? எல்லாவஸ்துக்களையும்போல் மனிதனும் தன்னிடத்தில் பொதிந்து கிடக்கும் அந்தரங்க அபாரசக்தியை யெல்லாம் வெளிக்காட்டித் தன்னால் எவ்வளவு வெற்றியடைய முடியுமோ அவ்வளவு வெற்றியையும் அடைவதுதான் அவன் இகலோகத்தில் செய்யக் கூடிய முக்கியமான கடமையாகின்றது. இப்படிப்பட்ட முழுவெற்றியையும் நாம் அதிலகுவில் அடையும்படி யார் நமக்கு வழிகாட்டுகிறாரோ அவர்தாம் "மனிதருக்கு ஏற்ற மாதிரி" யாக இருத்தல் முடியும். மரத்தின் வித்தை மகா பெரிய வேறொரு மரமாக்கக் கூடியவனே அவ்விதைக்கு நல்ல வழிகாட்டியா யிருத்தல்கூடும்; அஃதேபோல் நம்முடைய அபார சக்தியை யெல்லாம் அதிக வெற்றி யடையும்படியான மார்க்கத்தில் நம்மைச் செலுத்தக்கூடியவரே நமக்கொரு நல்லாசிரியரா யிருத்தல் முடியும். அவரே "மனிதருக்கேற்ற மாதிரி" யாவார்.

இப்படிப்பட்ட பேராசிரியர் மனிதர்களுக்கு உத்சாகத்தை யூட்டி மேன்மேலும் முயற்சியை விருத்தி செய்தற்கு வேண்டிய வழிகளைக் கற்றுக் கொடுக்கிறவரா யிருக்கவேண்டு மல்லாமல் மனிதர் பிறக்கும்பொழுதே கருமக்குவியலுடனும் பாபச்சுமையுடனும் பிறக்கிறார்கள் என்று அவர்களுக்கு இடுப்பு ஒடியத்தக்க அதைரிய முண்டாகும்படியான அசம்பாவிதக் கொள்கைகளைக் கற்பித்தல் கூடாது. பள்ளிக்கூடத்தி லிருக்கும் ஒரு மாணாக்கனை இங்கு உதாரணமாய் எடுத்துக் கொள்வோம். அவன் ஒரு சாதாரண மாணவனா யிருந்தபோதிலும் அவனுடைய ஆசிரியர் அவனை ஒவ்வொருநாளும் உத்சாகப்படுத்தி அவனைப்போல் சாமர்த்தியவான் வேறு யாருமில்லை

யென்று ஊக்கம் ஊட்டின் அச்சிறுவன் சில தினங்களில் எல்லோருக்கும் முதன்மையாய் விடுவான்; ஆனால் இதற்கு மாறாக மகாபுத்திசாலியாகிய ஒரு மாணாக்கனை அதைரியப் படுத்தி அவனை ஒவ்வொரு தினமும் முட்டாளென்றும் மூடனென்றும் திட்டி வருவோமாயின் சில தினங்களுக் குள் அம்மாணாக்கன் தன் முதன்மையான ஸ்தானத்தி லிருந்து நழுவி உண்மையாகவே உதவியற்றவனாய் விடு வான். மனித சுபாவம் இப்படித்தானிருக்கிறது; இதை ஒருவராலும் மறுக்க முடியாது. ஒருவனுடைய மனஸின் சந்தோஷத்தைப் போக்கி அவனுக்கு அதைரியத்தை ஊட்டுவோமாயின் அவன் உண்மையில் உயர்ந்தவனேயாயி னும் அதிசீக்கிரம் தாழ்ந்து போகிறான்; இப்படியே ஒருவனுடைய சஞ்சலத்தைப் போக்கி அவனுக்கு உத்சாகத்தை ஊட்டுவோமாயின் அவன் மிக மேலான நிலைமைக்குச் சிலகாலத்துக்குள் சென்று விடுகிறான். ஆத லின் மனிதருக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கத்தக்க யோக்கியதை பெற்றவர் பிறருக்கு அதைரியத்தையும் உத் சாகக் குறைவையும் உண்டு பண்ணக்கூடிய அசம்பாவித மான கொள்கைகளைப் போதிக்காமல், தாமே உலகத்தா ருக்கெல்லாம் ஓர் உதாரணமா யிருந்துகொண்டு தம்மு டைய அபாரசக்திகளை யெல்லாம் வெளிப்படுத்தி அவற் றின் பயனாக ஒவ்வொரு துறையிலும் நல்ல வெற்றியை அடைந்து அதனால் நமக்கும் அப்படிப்பட்ட ஜயமெல்லாம் கிட்டும்படியான இலேசான வழிகளைக் காட்டுதல் வேண் டும். பிறக்கும்போதே மனிதன் கருமக்கூட்டத் துடனும் பாபச்சுமையுடனும் பிறக்கிறான் என்னும் அவச்சொல் லான அதைரியம் நிறைந்த அசம்பாவித சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டு அதனால் தன் உத்சாகமும் முயற்சியும்

அடியோடு ஒழியப்பெற்று நாஸ்தியாய்ப் போகிறவர் போகட்டும். நல்வழிக்கு வருதற்கு எவ்வளவு பாடுபட்ட போதிலும் பாபத்தின் பலனாலும் கருமத்தின் பாசத்தாலும் ஒன்றும் பயனில்லாமற்போய்க் கடைசியில் அவர்கள் ஆருத்துயருடன் மரணமடையட்டும். இப்படிப்பட்ட அதைரியமான அசட்டுக் கொள்கையை ஒப்புக்கொள்வதைக் காட்டினும் இவ்வுலகில் மனிதன் பிறக்கும்போதே அபாரசக்தியுடன் பாபமாவது கருமமாவது இல்லாமலே பிறக்கிறான் என்றும், அப்படிப்பட்ட அபாரசக்தியை அவன் வெளிப்படுத்தி மகோன்னதமான வெற்றியையெல்லாம் அடைதற்கு இதுதான் வழியென்றும் ஒரு மகாபுருஷன் காட்டுவாராயின் அது எவ்வளவுதூரம் சிலாக்கியமான கொள்கையாயிருக்கிறதென்று நிதானித்துப்பாருங்கள். அப்படிப்பட்டவ ரல்லவோ "மனிதருக் கேற்ற மாதிரி" யாயிருக்கத் தகுந்தவர்.

ஓர் ஆலின் வித்தானது தனது முழுச்சக்தியையும் வெளிக்காட்டி ஒரு பெரிய மரமாக வேண்டுமாயின் அதை நல்ல பருவத்தில் ஊன்றி மழை வெயில் காற்று முதலிய சௌகரியங்களையெல்லாம் அதற்கு உண்டாகும்படி அதைப்பயிரிடுபவன் செய்வதே போல் மனிதனும் தன் சக்தியையெல்லாம் வெளிப்படுத்தி முழு வெற்றியும் அடைய வேண்டுமாயின் அவனுக்கும் சில நல்ல சந்தர்ப்பங்களெல்லாம் நேரிட வேண்டியது அவசியமே. ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் தான் மனிதனுடைய ஒவ்வொருகுணம் வெளியாதல் கூடும். உதாரணமாக ஒருவனுக்கு விடாமுயற்சியென்னும் ஒரு விசேஷகுணம் உண்டாகவேண்டுமாயின் அவனுடைய வழியில் பலவிதகஷ்டங்களெல்லாம் குறுக்கிட்டு அநேக இடையூறுகளும் நேரிடுதல் வேண்டும். இவ

ற்றையெல்லாம் சகித்துக்கொண்டு வெற்றியடைய வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் முன்னேக்கிச்செல்பவனிடத்தில்தான் விடாமுயற்சி காணப்படும். ஒருவனுக்குத் தேகதிடமும் இருந்து ரூபவதியான ஒரு ஸ்திரீயும் கைக்குக்கிட்டி அவளை நெருங்குவதற்கு எவ்வகை இடையூறுமில்லாமலிருக்கும்போது அவன் தன் காமத்தை அடக்கிக் கொள்வானுயின் அப்படிப்பட்ட புருஷனையே பரஸ்திரீகமனம் செய்யாத புண்ணியவானென்போம்; இஃதல்லாமல், "விருத்தாநாரி பதிவிரதா" என்பதுபோல் கேவலம் கையாலாகாமல் ஒருவன் சும்மா இருப்பானுயின் அவனைப் பேடியென்றே சொல்வோம். ஆகவே ஒருவனுக்கு எத்தனைவிதமான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றனவோ அத்தனைவிதமான குணவிசேஷங்கள் அவனிடத்திலிருந்து வெளியாகின்றன. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களெல்லாம் நிகழ்வதற்கு இடமில்லாமல் ஒருவனைத் தனியாக ஒரு காட்டில் விட்டு வளர்ப்போமாயின் மற்ற மனிதர்களிடத்தில் காணப்படும் அழகிய பலசிறந்தகுணமெல்லாம் அக்காட்டு மனிதனிடத்தில் காணப்படாமல் போகும். ஆதலின் மனிதன் தன் சக்திகளையெல்லாம் வெளிக்காட்டி முழுவெற்றியும் அடையவேண்டுமாயின் அவனுக்குஅநேகவிதமான சந்தர்ப்பங்களெல்லாம் நேரிடுதல் அத்தியாவசியம். மனிதர்கள் தம்மைச்சுற்றியுள்ள இயற்கைப் பொருள்களின் உண்மைகளையெல்லாம் கண்டுபிடிக்கும் பொருட்டு அதிகப் பாடுபடு வதனுலல்லவோ ஸயன்ஸ் என்று சொல்லப்படும் சாஸ்திரம் இக்காலத்தில் இவ்வளவு முன்னுக்கு வந்திருக்கிறது. வானத்திலுள்ள சூரிய சந்திர நக்ஷத்திர கிரகங்களையும் பூமியிலுள்ள மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலிய பூதங்களையும் கைவசப்படுத்தி

ஆராய்ச்சி செய்பவர்கள்தான் ஸயன்ஸ் ஞானத்தில் முதிர்ச்சியடைந்து வருகின்றனர்; வானத்திலுள்ள எல்லாக் கோளங்களையும் பூமியிலுள்ள எல்லாப்பூதங்களையும் தேவதைகளென்று சொல்லி அவற்றிற்குப் பூஜை முதலியதும் செய்து பயபக்தி விசுவாசத்துடன் நடப்பவர்கள் ஸயன்ஸ் ஞானத்துக்கு வெளியில் வெகுதூரத்துக்கப்பால் நிற்கின்றனர். ஒருகுதிரையை வைத்துக்கொண்டு அதை நான் தெய்வமென்றோ தெய்வ சம்பந்தமுள்ளதென்றோ கருதுவேனாயின் நான் அக்குதிரைக்குப் பூஜைசெய்து அதன் காலில் விழுவதைத்தவிர அதை நான் ஒன்றும் செய்ய முடியாது; எந்தநிமிஷத்தில் அக்குதிரையில் தெய்விகம் ஒன்றுமில்லை யென்று நினைக்கிறேனோ அந்தநிமிஷமுதலே அதன்மேல் சவாரி செய்ய எனக்கு ஆசையுண்டாகின்றது. ஆகவே "மனிதருக்கேற்ற நல்ல மாதிரி" யாயிருக்கக் கூடியவர் தாமும் பல துறைகளில் பழகித் தம்முடைய அந்தரங்க அபாரசக்திகளை யெல்லாம் வெளியப்படுத்தி ஒவ்வொரு துறையிலும் பழுதற்ற முழு வெற்றியும் அடைந்து மற்றவர்களுக்கும் தம்முடைய உதாரணத்தால் அவர்களுடைய அந்தரங்கசக்தியெல்லாம் வெளியாகும்படிசெய்து அவர்களுக்கும் முழுவெற்றியெல்லாம் உண்டாகும்படியான வழிகளைக்காட்டுதல் வேண்டும். இப்படிப்பட்ட பெரியார்தான் "மனிதருக்கேற்றமாதிரி" யாக இருக்கத்தகும்.

"மனிதருக்கேற்ற மாதிரி" யாக இருக்கும் பெரியார் மற்ற மனிதர்களுக்கு அவர்களிடத்தில் அமைந்து கிடக்கும் அபாரசக்தி இப்படிப்பட்டதென்று விளக்கிக் காட்டுவதுடன் அவர்களுக்கு ஓர் உதாரணமாகவும் இருந்துகொண்டு நல்ல லக்ஷியத்தை யுண்டு பண்ணுவார்; இப்படி லக்ஷியமாக இருப்பவர் மனிதர்களின் சக்தி முழுதையும்

வெளியில் கொண்டுவந்து வெற்றியடையும்படியான பல் வேறு துறைகளையும் அவர்களுக்குக் காட்டுவதுடன் அவர்களுக்குச் சிரமமில்லாமல் போகக்கூடிய நேரான எளிய மார்க்கத்தையும் தெரிவித்தல் தம்முடைய முக்கிய கடமை யென்று கருதுவார். எந்தவழியே சென்றால் வெற்றியுண்டாகு மென்றும் எந்தவழியே சென்றால் தோல்வியுண்டாகு மென்றும் நம்முடைய பெரியார் செம்மையாய் விளக்கிக்காட்டுதல் அவசியம். ஏவல் இன்னதென்றும் விலக்கல் இன்னதென்றும் அப்பெரியார் விளக்கிக்காட்டினு லொழிய நாம் நேரானவழியில் சென்று சீரான வெற்றியைப்பெறுவது சிரமசாத்தியமாகும். மனிதர்கள் செல்லக் கூடிய வழியில் எண்ணிறந்த பள்ளங்களும் படுகுழிகளும் நிறைந்திருப்பதால் அப்பெரியாரே நமக்கு முன்னால் சென்று சரியான வழியைக்காட்டுதல் அவசியமாகும்.

பள்ளிக்கூடங்களிலும் மற்ற இடங்களிலும் இக்காலத்தில் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது பாடத்தில் சொல்லப்படும் பொருளைப்போன்ற மாதிரி (model)ஒன்று செய்து காட்டுவது சகஜமாய் விட்டது; சிங்கத்தின் கதை யொன்று சொல்வதாயிருந்தால் சிங்கத்தைப்போல் மண்ணாலோ அல்லது மற்றொருவஸ்துவாலோ செய்யப்பட்ட ஒரு பிராணியைப் பிள்ளைகளுக்கு முன்னால் மாதிரிகாட்டுவதை நம்முடைய பள்ளிக்கூடங்களில் தினம் தினம் நாம் காண்கின்றோம். வாயால் வெறும்பாடம் சொல்லிக்கொடுப்பதைக் காட்டினும் மாதிரிகாட்டிப் பாடம் சொல்வது மிக்க நன்மை பயக்குகிறதென்று இக்காலத்திய போதனு முறையில் கண்டுபிடித்திருக்கின்றனர். வாஸ்தவத்தில் வாயால் மட்டும் உபன்னியசிப்ப தோடு நின்று விடாமல் செய்கையிலும் நடத்திக்காட்டினால் எவ்வளவோ அதிக

மான பிரயோசனம் உண்டாகிறது. மனிதர்களுக்கு எவ்வளவு செளகரியமான சந்தர்ப்பங்கள் அமைந்திருந்தபோதிலும் அவர்களுடைய சக்தியானது ஒவ்வொரு சமயத்தில் இவ்விகலோகத்தில் காணப்படும் சங்கடங்களுக்கு ஆற்ருமல் தளர்ச்சியடைந்து விடுகிறது; வழியிலுள்ள பள்ளம் படுகுழியில் மனிதன் அடிக்கடி சோர்வடைந்து விழுந்து விடுகிருன். இப்படிப்பட்ட சமயங்களில் தான் நம்முடைய பெரியாரின் அனுஷ்டான மார்க்கம் நமக்கு நல்ல உதாரணமா யிருக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் நமக்கு மாதிரியாக இருப்பவர் இன்னவிதம் செய்து ஜயமடைந்தாரென்று நமக்கு ஞாபகம் வரும் போது நாமும் அப்படியே செய்து ஜயம் பெறலாமென்று நமக்கு அளவு கடந்த உத்சாகம் உண்டாகிறது. நமக்கு வழி காட்டியாக இருப்பவர் இன்ன இன்ன சமயத்தில் இன்ன இன்னவிதம் நடந்து காட்டி யிருக்கிருரென்று நாமும் அவ்விதமே செய்து இவ்வுலக கஷ்டத்தில் சிக்கிக் கொண்டு ஆழ்ந்து போகாமல் மேலேசென்று ஜயம் பெறுகிறேம். "அவர் செய்ததைப்போல் நாமும் செய்வோம்," என்று நமக்கு உத்சாகம் உண்டாகிறது. உதாரணமாக ஒரு ஸர்க்கஸ் காரரின் வேலையைக் கவனிப்போம். ஒருவன் தானுகவே ஓர் அருமையான வேலையைச் செய்யத் தயங்குகிருன்; ஆனுல் ஸர்க்கஸில் வேறொருவன் அவ்வரிய வேலையைச் செய்துகாட்டும் பக்ஷத்தில் முன்னுல் தயங்கின மனிதனும் அதைப் பார்த்துவிட்டு அப்படியே செய்வதற்குத் தைரியம் கொள்ளுகிருன். முன்னுல் சிறிது மயக்கமாக இருந்த விஷயம் வேறொருவன் செய்துகாட்டிய மாதிரியைக் கண்டவுடன் விளக்கமாய் விடுகிறது. ஆனுல் நாம் ஒருவரை மாதிரியாகக் கொள்ளும்போது அவரும்

நம்மைப்போன்ற ஒரு சாமான்ய மனிதரா யிருத்தல் வேண்டும். இப்படி யில்லாவிடின் அவர் "மனிதருக் கேற்றமாதிரி" யாக இருப்பது முடியாது. "மனிதருக் கேற்ற மாதிரி"யா யிருப்பவர் எல்லாரும் தம்மைப் பார்த்துப் பின்பற்றுவதற்குத் தகுந்தவாறு இலகுவான மனிதரா யிருத்தல் வேண்டும். ஒரு ஸர்க்கஸ் கூடாரத்தில் ஸாண்டோவைப்போன்ற பலாட்டியர் ஒருவரைக்கண் டால் அவரைப்போல் நாமும் ஆகலாமென்னும் ஆசையும் உத்சாகமும் நம்முடைய மனதில் குடிகொள்ளுகின்றன; ஆனால் நம்முடைய முன்னிலையில் சிங்கக்குட்டி யொன்று ஒரு பெரிய யானையின் மஸ்தகத்தைக் கையாலறைந்து அதன் மூளையை உறிஞ்சுமாயின் அச்சிங்கத்தைப்போல் நாமும் ஆய்விட வேண்டுமென்று நமக்கு ஆசையாவது உத்சாகமாவது ஜனிப்பதில்லை. சிங்கத்தின் தைரியத்தை யும் சாமர்த்தியத்தையும் பார்த்து நாம் மெச்சிக்கொள்ள லாமே யொழிய அச்சிங்கத்தைப்போல ஆகவேண்டு மென்று யாரும் ஆசைப்படுவதில்லை. இவ்வாறே ஆகாயத் தில் சிறிதும் சலிப்பில்லாமல் பறந்து செல்லும் கழு கொன்றை நான்பார்க்கும்போது அதைப்போல் நானும் ஆகாயத்தில் பறக்கவேண்டு மென்று ஒருபோதும் அவா உண்டாவதில்லை; ஆனால் என்னைப்போன்ற ஒரு மனிதன் ஏரோப்லேன் என்னும் ஆகாயவிமானத்தில் ஏறிப்பறப்பா னாயின் அவனைப்போல் நானும் செய்யக்கூடுமென்று எனக்கு ஓர் உத்சாகமான உணர்ச்சி யுண்டாகிறது. இதற் குக் காரணமென்ன? என்னைப்போன்ற ஒரு, மனிதன் எவ்வளவு அபாரமான அற்புத வேலைகளெல்லாம் செய்த போதிலும் நானும் அவனைப்போன்ற ஒரு மனிதனுனதால் எனக்கும் அப்படிப்பட்ட ஆசை உண்டாகிறது. சிங்கத்தின்

சக்திக்கும் கழுகின் சக்திக்கும் என்னுடைய சக்திக்கும் அதிக வித்தியாச மிருப்பதால் அச்சிங்கத்தைப் போல வாவது கழுகைப்போலவாவது செய்ய என்மனம் பிரியப் படுவதில்லை.

இவ்வாறே எனக்கு வழிகாட்டியாயிருப்பவர் என்னைப் போன்ற சாமான்ய மனிதராயிருத்தல் வேண்டும். இவ்வாறில்லாமல், ஆகாயத்திலிருந்து முக்கண்களையுடைய கடவுள் ஒருவர் இறங்கி வந்தார்; அவர் இகலோகத்து மலையரசன் மகளை மணந்துகொண்டார்; பிறகு அக்கடவுள் தம்முடைய இடதுபாரிசத்தில் தம் மனைவியையும் சேர்த்து ஒட்டிக்கொண்டு வலப்பாதி ஆணாகவும் இடப்பாதி பெண்ணாகவும் ஆய்விட்ட அசாதாரணமான அர்த்த நாரீசுவரர் என்பவர் எனக்கொரு வழிகாட்டியாக இருந்தால் அதனால் எனக்கென்ன பயன்? அவரைநான் எப்படிப் பின்பற்ற முடியும்? அல்லது ஒரு தகப்பனுக்கும் அவனது மகனுக்கும் தர்க்கம் உண்டாகிறது; தகப்பன் கடவுளே இல்லையென்கிறான், மகன் அக்கடவுள் "தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்" என்கிறான்; உடனே அத்தகப்பன் ஒரு தூணை உதைக்கிறான்; அதற்குள்ளிருந்து மனித வுடம்பும் சிங்கத்தலையும்கூடிய கடவுள் ஒருவர் நரசிம்ம மூர்த்தியாக வெளியில்தோன்றுகிறார்; இந்தச் சிங்கமனிதனாவது எனக்கு ஒருமாதிரி (model) யாக இருத்தல் முடியுமோ? அல்லது கடவுளுடைய குமாரனென்று ஒருவர் பிறக்கிறார்; அவர் சிலுவையில் மரணமானபின் பூமியில் புதைக்கப் படுகிறார்; பிறகு மறுநாள் உயிர்த்தெழுந்து வானத்தில் ஏறுகிறார். இவரால்தான் எனக்கென்ன பயன்? இம்மூவரில் யாரும் "மனிதருக்கேற்ற மாதிரி" யாக இருப்பது முடியாது. எவரொருவர் என்னைப்போல் சாமான்ய

மனிதராயில்லாமல் தெய்வமாகவோ தெய்வ அவதாரமாக வோ தெய்வ குமாரனாகவோ இருக்கின்றாரோ அவர் எனக்கு வழிகாட்டினால் என்னால் அவரைப் பின்பற்ற முடியாது. பாதி ஆணும் பாதி பெண்ணுமாக இருக்கும் சக்தியாவது பாதி மனிதனும் பாதி சிங்கமுமாயிருக்கும் சக்தியாவது புதை குழியிலிருந்து வானுலகுக்கு உயிர்பெற்று எழும்பும் சக்தியாவது எனக்கில்லை. அப்படிப்பட்டவர்கள் எனக்கு உதாரணமாக இருத்தல் முடியாது. அவர்கள் எனக்கு வழிகாட்ட விரும்பினாலும் என்னால் அவர்களைப் பின்பற்றமுடியாது. அவர்களுடைய செய்கைகளெல்லாம் எனக்கு ஆச்சரியத்தையே விளைக்கின்றன; ஆனால் அவர்களைப்பார்த்து என் காரியங்களைச்செய்ய எனக்கு ஆசையுண்டாவதில்லை. அவர்கள் மனிதநிலைமைக்கு மேற்பட்டவர்களானதால் அவர்களை என்னால் பின்பற்ற முடியாதது எனக்கு ஒரு கௌரவ ஹானியானவிஷயமாகாது. அவர்களுக்கும் எனக்கும் வானத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசமுண்டு. இதனால் அவர்களை நான் பின்பற்றமுடியாது; ஆனால் என்னைப்போன்ற ஒரு சாதாரண மனிதரே எனக்கு ஒரு வழிகாட்டியா யிருத்தல்வேண்டும்; அவரே "மனிதருக்கேற்ற மாதிரி" யாயிருப்பார். ஆதலின் "மனிதருக்கேற்றமாதிரி" யாயிருக்கக்கூடியவர், "உங்களைப்போல் நானும் ஒரு சாமான்ய மனிதன்தான்," என்று சொல்லத் தகுந்தவராயிருத்தல்வேண்டும்.

சுருங்கச் சொல்லுமிடத்து யாரிடத்தில் இதன்கீழ்ச் சொல்லப்படும் குண விசேஷங்களெல்லாம் காணப்படுகின்றனவோ அவரே "மனிதருக்கேற்றமாதிரி" யாயிருக்கத் தக்கவர்:—

1. அவர் மனிதர்களுடைய உண்மையான நிலையைக்

கண்டறிந்து அவர்களுக்கு மிக்க உற்சாகத்தை யளிக்கத் தக்க வழியைக் காட்டுதல்வேண்டும்.

2. அவர் மனித சுபாவத்துக் கேற்றமாதிரியான தத்துவத்தை அவர்களுக்குப் போதித்தல் வேண்டும்.

3. மனிதர்களுடைய அபரிமிதமான சக்தியெல்லாம் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து அபாரஜயம் பெறும்படியான துறைகளையெல்லாம் அவர் அமைத்துக் காட்டுதல் வேண்டும்.

4 அவர்தாமே நமக்கெல்லாம் ஒரு மாதிரியாக இருந்து ஒவ்வொன்றையும் நடத்திக்காட்டுதல் வேண்டும்.

5. அவர் போதிக்கும் விஷயங்களையெல்லாம் தாமே ஒவ்வொன்றாக அனுஷ்டித்துக் காட்டவேண்டிய பிரமயங்களெல்லாம் அவரது ஜீவதிசையில் நேர்ந்து அவை ஒவ்வொன்றிலும் அவர் பழுதற்ற முழுவெற்றியும் அடைந்திருத்தல் வேண்டும்.

இந்த ஐவகைப் பெருமையும் உடையவர் எவரோ அவரே "மனிதருக்கேற்றமாதிரி"யாக இருக்கக் கூடியவர். இப்படிப்பட்ட பெரியார் யாரென்று நாம் தேடிப்பிடித்தல் வேண்டும். 'என்னுடைய மூதாதையர் இருந்துவந்த மார்க்கத்திலேயே நானும் இருப்பேன், அம்மார்க்கம் புத்திக்கும் யுக்திக்கும் பொருத்தமா யிருப்பினும் இல்லாமற் போயினும் அதைக் கைவிடமாட்டேன்' என்று சொல்வது அறிவுடையோரின் செய்கையன்று. நம்முடைய மாதாபிதாக்கள் எந்த மார்க்கத்திலிருந்து வந்தபோதிலும் ஆண்டவன் நமக்குப் பிரத்தியேகமான பகுத்தறிவைக் கொடுத்திருப்பதால் அப்பகுத்தறிவை நன்கு செலவுசெய்து ஆராய்ந்து பார்த்து இவ்வுலகில் இதுவரையில் அவதரித்திருக்கும் பெரியார்களுடைய தன்மையை யெல்லாம் ஒன்றே

டொன்று சீர்தூக்கிப் பார்த்து அப்பெரியவர்களுக்குள் ளெல்லாம் எவரொருவர் "மனிதருக்கேற்றமாதிரி" யாக இருக்கிறாரோ அவரையே நாம் பின்பற்றுதல் கடமை யாகும். இதுதான் புத்திசாலிகள் செய்யத்தக்க காரியம். நமக்குப் பகுத்தறிவு நிறைந்திருப்பதால் முன்னோர்கள் சென்றுவந்த குருட்டுவழியையே முரட்டுத்தனமாய்ப் பின்பற்றாமல் மனித கோடிக்கு எந்தவழியில் அதிக நன் மையுண்டோ அந்தவழியையே நாமும் பற்றிப் பிடித்தல் வேண்டும். அவ்விஷயத்தில் நாம் தயங்குதல் தகாது. நம் முடைய பகுத்தறிவு நமக்கே சொந்தமாகக் கடவு ளால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைச் செம்மையாய் உபயோகிக்கும் முறையில் நாம் பின்வாங்குவது பேடித் தனமாகும். இது வரையில் இவ்வுலகில் எண்ணிறந்த மகான்கள் அவதரித்து மனிதவர்க்கத்தாரின் நிலைமையை மேன்மைப்படுத்தப் பாடுபட்டு வந்திருக்கின்றனர் என் பதை ஏற்றுக்கொள்ளுகிறோம். அவரவரும் தம் தம்மாலி யன்ற நன்மையை இவ்வுலக முன்னேற்றத்தின் பொருட் டுச் செய்துவந்திருக்கின்றனர் என்பதும் உண்மையே. நல் வழி காட்டுதற்காகப் பெரியோர்கள் அவதரிக்காத ஒரு தேசமாவது ஒரு ஜாதியாவது இதுவரையில் இருந்ததில்லை. எல்லாத்தேசங்களிலும் எல்லாஜாதியாரிடத்திலும் நல் வழிகாட்டிகள் அவதரித்தே யிருக்கிறார்கள். ஆனால் அப் படிப்பட்ட பெரியாரெல்லாம் செய்துவந்த செய்கைகளும் ஓதிவந்த உபதேசங்களும் பிற்காலத்தில் மனித சேஷ்டை யால் மாறுபடாமலிருந்ததில்லை. அவர்களுடைய உப தேசங்களெல்லாம் மாறுபட்டதோடு நில்லாமல் அவர் களுடைய ஜீவிய சரித்திரங்களும் தெய்விகக் கதைகளாக (mythology) மாறிவிட்டன. அப்பெரியார்களின் சரி

யான ஜீவியசரித்திரம் இன்னதுதா னென்று அவர்கள் ஒவ்வொருநாளும் செய்துவந்த செய்கைகள் இன்ன இன்னவை யென்றும் அவர்களால் உபதேசிக்கப் பட்டு வந்த உண்மையான உபதேசங்கள் இன்னவை யென்றும் நாம் தெரிந்துகொள்ளப் போதுமான ரிக்கார்டு சம்பந்த மான சாக்ஷியம் கிடைப்பதில்லை. எல்லாம் மனிதசேஷ்டை யால் மாறுபட்டுக் கிடக்கின்றன. இதுவரையில் அவதரித் திருக்கும் மகான்களில் யாரேனும் ஒருவருடைய ஜீவிய சரித்திரமாவது அவர் செய்துவந்த உபதேசமாவது நாளி துவரையில் மனிதசேஷ்டையால் மாறுபாடு அடையாமல் சுத்தசுயப் பரிசுத்தத்துடன் நமது கைக்கு எட்டியிருக் கிறதோ வென்று பரிசீலனை செய்து பார்ப்போமாயின் அப்படிப் பட்ட பெருமைவாய்ந்த ஒரே ஒரு மகான்தான் இவ்வுலகில் காணப்படுகிறார். இவருடைய ஜீவிய சரித்திரத் தின் ஒவ்வொரு நுண்ணிய விஷயமும் அப்படியே ஆப் பட்டமாக இன்றுவரையில் ஒன்றும் அழியாமல் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அவரால் இறைவனிடத்திலி ருந்து கொண்டுவரப்பட்ட தேவகட்டளைகளும் அவரது சாதாரண உபதேசங்களும் ஒரு சிறிதும் மாறுபடாமல் இன்று வரையில். வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றப் பட் டிருக்கின்றன. இப்படிப்பட்ட இணையில்லாப் பெரு மைவாய்ந்த பெரியார் ஒருவர்தான் இருக்கிறார் என்று சொன்னோம். அப்பெரியாரிடத்தில் "மனிதருக்கேற்ற மாதிரி" யானவரிடத்தில் இருக்கவேண்டிய மேலே சொன்ன ஐந்து விசேஷ குணங்களும் உண்டோவென்று சற்று ஆராய்வோம்.

1. முதன் முதல் அம்மகா புருஷர் மனித சுபாவத் தைப்பற்றிய உண்மையை எவ்வளவுதூரம் கண்டறிந்திருக்

கிறா ரென்றும் அச் சுபாவத்துக்கு உற்சாகத்தைத் தரத் தக்க வழியை அவர் எவ்வளவு அழகாக அமைத்திருக் கிறா ரென்றும் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மனி தரை எவ்வளவு மேன்மையுடன் அமைக்கவேண்டுமோ அவ்வளவு மேன்மையுடன் ஆண்டவன் நம்மைச் சிருஷ்டித் திருக்கிறானென்று அப்பெருமானார் சொல்கிறார்; ஆண்ட வனிடத்தில் பூரண நம்பிக்கைவைத்து அவனது கட்டளை போல் நற்கிரியைகளைச் செய்பவர்கள் அளவு கடந்த வெற்றியையெல்லாம் அடைவார்களென்றும் அப்பெரு மானார் அருளியிருக்கிறார். இது எவ்வளவு அருமையான உண்மையா யிருக்கின்றது! மனிதன் பிறக்கும் போதே கருமக்குவியலுடனாவது பாபச்சுமையுடனாவது பிறப்ப தாய் அப்பெருமானார் சொல்லவில்லை. இவ்வளவுதான் மனிதனால் செய்ய முடியும் இதற்குமேல் அவன் போக முடியாதென்றும் அம்மகான் ஒன்றும் எல்லை கட்டிவிட வில்லை. மனிதனிடத்தில் இறைவனால் அமைக்கப்பட் டிருக் கும் அபார அந்தரங்க சக்திக்கு (latent potential facul-ties) அளவில்லையென்றும் அதனால் அம்மனிதன் அளவு கடந்த வெற்றியெல்லாம் பெறலாமென்றும் இவ்வுலகில் முதன் முதல் இப்பெருமானாரே உபதேசிக்கத் தலைப்பட் டார்கள்; இதனால் நாம் ஒவ்வொருவரும் நாளுக்குநாள் மேலே மேலே போக உத்சாக முண்டாகிறது. இது எவ் வளவு ஆச்சரியமான உத்சாகமாயிருக்கிறது! மனிதர்கள் பிறவியிலேயே கருமக்கடலிலும் பாபவெள்ளத்திலும் மிதந்துகொண்டு திசைதெரியாமல் தத்தளிக்கிறார்கள் என்று அவர்களை அதைரியப்படுத்தி விடாமல் அவர்கள் பாபமும் கருமமும் இல்லாமல் பிறந்து மகா மேன்மையான அதிசய வெற்றிகளையெல்லாம் அடைதல் முடியும் என்னும்

தத்துவத்தை உபதேசித்திருப்பது மனிதர்களுக்கு எவ்வளவு பிரயோசனத்தை விளைக்கக்கூடியதாயிருக்கிறதென்பது உங்களுக்கே நன்கு விளங்கும். மனிதன் பாபமும் கருமமும் இல்லாமல் பிறப்பதோடு அவனிடத்தில் நன்மை செய்தற்குரிய அரிய சக்தியெல்லாம் நிறைந்து கிடக்கின்றதென்றும் எம்பெருமானார் சொல்லியிருக்கிறார்கள். மனிதனிடத்தில் இயற்கையாய் ஒன்றும் தோஷமில்லையென்று அப்பெரியார் சொல்வதோடு இவ்வுலகத்திலும் ஒன்றும் தோஷமில்லையென்றும் எண்பித்திருக்கிறார்கள். இவ்வுலகில் ஒருவன் ஒரு துன்பத்தால் இடர்ப்படுவானாயின் அது அவனுடைய செயலின் தீமையால் நேர்ந்ததேயொழிய வேறொன்றாலுமல்லவென்று அப்பெருமானார் சொல்கிறார். இயற்கையில் காணப்படும் வஸ்துக்களை நாம் நல்லவழியில் செலவு செய்யாமல் தீயவழியில் செலுத்துவோமாயின் உடனே நமக்குத் தீங்கும் துன்பமும் உண்டாகின்றன. உலகத்தில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவும் நமது நன்மைக்கே படைக்கப்பட்டிருக்கின்றன; ஆனால் அதனதன் சட்டத்தை நாம் மீறும் பக்ஷத்தில் உடனே துன்பம் நேரும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாய்விடும். உலகமும் உலகத்திலுள்ள மனிதர்களும் பரிசுத்தப் பிறவியையுடையவர்களாயிருக்கிறார்களென்பது எவ்வளவு உயர்ந்த நேர்த்தியான தத்துவமாயிருக்கின்றது! இவ்வுண்மையை, இவ்வுலகமே மாயாவுலகமென்றும் துக்கசாகரமென்றும் பிறவியே கருமமென்றும் பாபமென்றும் சொல்லும் இடுப்பொடிக்கும் சித்தாந்தங்களுடன் ஒப்பிட்டு நோக்கினால் எம்பெருமானார் "மனிதருக்கு ஏற்றமாதிரி"யா இல்லையாவென்பது செவ்வனே விளங்கும்.

2. இரண்டாவதாக மனிதசுபாவத்துக் கேற்றமாதிரி

யான தத்துவத்தை அப்பெரியார் கற்றுக்கொடுத்திருக்கி றாரோ வென்று நாம் ஆராய்ச்சிசெய்தல் வேண்டும். மனித சுபாவத்துக்கு மாறுன தத்துவங்களைப் போதிப்பவர் ஒரு வரையும் "மனிதருக்கேற்ற மாதிரி" யென்று சொல்வது தகாது. "மனிதன் இவ்வுலகத்தில் அவதரித்ததன் நோக்க மென்ன?" என்னும் விஷயத்தில் பல பல மதத்தினரும் பல பல தத்துவ சாஸ்திரிகளும் பல பல விதமாய் அபிப் பிராயம் கொடுத்திருக்கின்றனர். அவர்களெல்லோரும் ஒருவரோடொருவர் மண்டையோடு மண்டை மோதிக் கொண்டிருக்கும்போது தெய்விக வாக்குச் சம்பந்த முடைய எம்பெருமானுர் மனிதப்பிறவியின் நோக்கம் இன்னதென்பதை ஒரே அரபுவார்த்தையில் அடக்கிவிட் டார்கள். 'மனிதன் ஏன் இவ்வுலகில் பிறக்க வேண்டும்?' என்பதற்கு விடை பலாஹ் என்னும் ஒரே பதத்தில் அமைந்துவிட்டது. பலாஹ் என்னும் இப்பதம் எவ்வளவு அர்த்த புஷ்டியுள்ளதென்பதை இங்கு நாம் சிறிது ஆராய் வோம். பிறக்கும் போதே கூடவரும் கருமத்தையும் பா பத்தையும் நீக்கிக்கொள்ள முயல்வதுதான் மனிதப்பிறவி யின் நோக்கமென்று அவல ஓசை செய்பவர் செய்யட்டும்; ஆனுல் எம்பெருமானின் உபதேசப்படி அந்நோக்கமானது பலாஹ் என்பதாகும்; அரபு பாஷையில் ஒரு பதத்துக்கு இரண்டு பொருள் ஏற்படும்போது அப்பதத்தின் சாதா ரண அர்த்தம் ஒரு விஷயத்தின் தீர்மானத்தையும் அதன் மூலார்த்தம் அத்தீர்மானத்தை அடைவதற்குரிய வழி யையும் காண்பிப்பது சகஜம்; இது அரபுபாஷையின் பெருமை. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இரு பொ ருள்படும் பதங்களுள் பலாஹ் என்பது ஒரு சிறந்த பத மாகும். பலாஹ் என்பதன் சாதாரண அர்த்தம் தமிழில்

சொல்வதற்கு முடியாமலிருக்கிறது. ஆனால் "விசேஷ ஜயம்" என்னும் சொற்றொடர் ஒருவாறு பலாஹ் என்பதன் சாதாரண அர்த்தத்தைக் குறிக்கலாம். அப்பொழுதும் பலாஹ் என்பதன் முழுக்கருத்தையும் செவ்வனே விளக்குவது முடியாது. இப்பதத்தின் மூலார்த்தத்தை நோக்கினால் அந்த "விசேஷ ஜயத்தை" அடைதற்குரிய வழிகளையெல்லாம் அது குறிக்கும். நிலத்தை உழுது பண்படுத்திப் பூமிக்குள்ளிருக்கும் வஸ்துக்களை வெளியில் கொண்டுவருகிற குடியானவனை, பலாஹ் என்பதன் மூலார்த்தம் குறிக்கும்; இன்னும் பதுங்கிக்கிடக்கும் மிருகங்களைப் புதர்களிலிருந்து வெளியில் விரட்டும் வேடனையும் அது குறிக்கும். மூலார்த்தத்தில் உழுதல், புதர்களைக் கலைத்தல் என்று பொருள் படுவது ஒருவன் செய்யக்கூடிய தொழிலையும், "பலாஹின்" சாதாரண அர்த்தம் அத்தொழிலால் உண்டாகக்கூடிய வெற்றியையும் தெரிவிக்கின்றன. உழுதொழிலால் மகசூல் உண்டாகிறது; புதர்களிலிருந்து மிருகங்களைக் கலைப்பதால் வேட்டை அகப்படுகின்றது. நிலத்தை உழுது பண்படுத்த முயற்சிப்பதால் அதன் அந்தரங்க சக்தியால் விளைவு என்னும் வெற்றி உண்டாகிறது; இஃதேபோல் மனிதனும் தன்பாலுள்ள அபார அந்தரங்க சக்தியையெல்லாம் நல்வழியில் உபயோகிக்க முயற்சிப்பானாயின் அவனுக்கும் அளவற்ற வெற்றியுண்டாகும். தனக்கு ஆண்டவன் கொடுத்திருக்கும் முழுச்சக்தியையும் வெளிப்படுத்தி வேண்டிய அளவு விசேஷ ஜயத்தைப் பெறவேண்டுமென்பதுதான் மனிதப்பிறவியின் நோக்கம். இதுதான் அவனுடைய பலாஹ் எனப்படுவது. மனிதனுடைய அந்தரங்க சக்திக்கு எப்போது அளவில்லையென்று சொன்னோமோ அப்பொழுதே அச்சக்தியை உபயோகிக்க வே

ண்டிய துறையும் அளவு கடந்ததா யிருத்தல் வேண்டும். மனிதன் தன்னுள் பொதிந்து கிடக்கும் அளவற்ற சக்தியை வெளிப்படுத்த எத்தனிப்பானாயின் அவனுக்கு இவ்வுலகில் ஒன்றும் இடையூறு உண்டாக மாட்டாது; எவ்வளவுதூரம் அவன் வெற்றியடைந்த போதிலும் இவ்வுலகம் அவனுக்கு இடங்கொடுத்துக் கொண்டே யிருக்கும். ஒருவன் தன்னுடைய பாபச்சுமையைப் போக்குவதும் கருமக் கடலை நீந்துவதுமே அவன் இவ்வுலகத்தில் அடையத்தக்க நோக்கமென்று சொல்பவருடைய சித்தாந்தத்தை எம்பெருமானாரின் "பலாஹ் சித்தாந்த"த்துக்கு முன்வைத்து ஒப்பு நோக்குவோமாயின் எம்பெருமானாரின் உபதேசம் இதரர்களின் உபதேசங்களைக் காட்டினும் எவ்வளவுதூரம் சிறந்ததென்பது செவ்வனே வெளியாகும். பாபக்கடலையும் கருமக்குவியலையும் தாண்டி அக்கரை சேர்வது மட்டும் இதர மதங்களின் நோக்கம்; ஆனால் எம்பெருமானார் சொல்வது யாதெனின், மனிதன் பாபமும் கருமமும் இல்லாமல் பிறந்து தன்னுடைய முழுச்சக்தியையும் வெளிக்கிளப்பி விசேஷ ஜயம் அடைய முடியும் என்பதுதான். இதர மதங்களின் லக்ஷியம் எந்த இடத்தில் முடிவடைகின்றதோ அதே இடத்தில் தான் எம் இஸ்லாத்தின் லக்ஷியம் ஆரம்பமாகின்றது. இதர மதங்கள் மனிதர்களின் பிறவிக் கருமத்தையும் பாபத்தையும் தொலைக்கமட்டுமே பார்க்கின்றன; ஆனால் எமது "பலாஹ்சித்தாந்த"ப்படி மனிதன் பாபமும் கருமமும் இல்லாமல் பிறந்து அநேக நன்மையான காரியங்களையெல்லாம் செய்து அளவற்ற மேன்மையடைகிறான்.

3. மனிதனுடைய அபாரசக்திகளை யெல்லாம் வெளிப்படுத்தி அபரிமிதமான வெற்றியை யடைவதற்கு வே

ண்டிய துறைகளையெல்லாம் எம்பெருமானார் அமைத்திருக்கின்றார்களோவென்று நாம் மூன்றாவதாகக் கவனித்தல் வேண்டும். மனிதனுடைய சக்திக்கு அளவில்லையென்று சொல்லிமுடித்தபின் அச்சக்திகளை வெளிப்படுத்துதற்கு வேண்டிய வழிகளும் அநந்தமா யிருத்தல் வேண்டும். மனிதனுடைய சக்திக்குத் தகுந்த வண்ணம் இவ் வண்டகோள முழுதும் அவனுக்கு வசமாயிருக்கும்படியே அமைக்கப்பட்டிருக்கிறதென்று எம்பெருமானார் தங்களுடைய இறைவனிடத்திலிருந்து தேவவாக்கியங்களை வரவழைத்துத் தந்திருக்கிறார்கள். "மகா நிச்சயமாக நம்பிக்கையுள்ள மூமின்களுக்கு வானலோகங்களிலும் பூலோகத்திலும் அறிகுறிகளுண்டு"—(அல்குர்ஆன், 45:3). "மேலும் வானலோகங்களில் என்ன என்ன உண்டோ அவையும் பூலோகத்தில் என்ன என்ன உண்டோ அவையும் உங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி அவன் (அல்லாஹுத் தஆலா) அமைத்திருக்கிறான்"—(அல்குர்ஆன், 45:13). புவனத்திலும் சுவனத்திலும் காணப்படும் ஒவ்வொன்றும் மனிதனுடைய நன்மைக்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றது. முற்காலத்தில் பலஜாதியார்களும் இயற்கைப் பொருள்களான சூரியன் சந்திரன் நக்ஷத்திர கிரகங்கள் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் முதலியவற்றையெல்லாம் தெய்வங்களென்று பூஜிப்பதுண்டு. அப்படி இயற்கைப் பொருள்களையெல்லாம் தெய்வங்களென்று மதிக்கும் மனிதர்களிடத்தில் இயற்கை சாஸ்திரம் (Physical Science) எவ்வாறு விருத்தியடைதல் முடியும்? எவரொருவர் வானமண்டலங்களும் பூமிமண்டலமும் நமக்குக் கீழ்ப்பட்டவை'யென்று நம்புகின்றாரோ அவரே அம்மண்டலங்களுக் குரிய உண்மைகளை உணர்தல் முடியும். இப்படி

இயற்கைப் பொருள்களை யெல்லாம் தெய்வங்களென்று கொண்டாடும் கொடிய மௌட்டீக விக்கிரக ஆராதனை யை யெல்லாம் எம்பெருமானார் அடியோடு வேர் அறுப் பாய் அறுத்து விட்டார்கள். இவ்வண்ணமாகவே எம் பெருமானார் மனிதனுக்கு எல்லாத் துறைகளிலும் விசால புத்தியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

4. நான்காவது அம்சத்தின் பிரகாரமும் அப்பெரி யார் "மனிதருக்கேற்ற மாதிரி" யா யிருக்கின்றாரோ வென்று ஆராய்ச்சி செய்தல் வேண்டும். மனித சுபாவ மானது மகா சிக்கலாகவும் பல் வேறுவகையாகவும் அமைக்கப்பட் டிருக்கிறது. உலகத்தில் காணப்படும் எல் லா நிலைமைகளிலுள்ள மனிதர்களுக்கும் அப்பெரியார் ஒரு வழிகாட்டியா யிருத்தல் அவசியமாயிருக்கிறது. எம் பெருமானார் அப்படி யிருக்கிறாரோ வெனின், ஆம் என் றே சொல்லத்தக்க பெருமை அவரிடம் காணப்படுகிறது. இப்பெரியாரைப்போல் வேறு யாரும் இவ்வுலகத்தில் கா ணப்படும் பல்வேறு படித்தரத்திலுள்ள மனிதர்களுக்கும், வழிகாட்டியா யிருத்தல் முடியாது. அவ்வாறு யாருமே யில்லை. எம்பெருமானார் தாமாகவே மற்றவர்களுக்கு வழி காட்டி யிருக்கும் பக்ஷத்தில் அவர்கள் எல்லாமனிதர் களுக்கும் ஏற்றமாதிரியா யிருப்பது முடியாது; ஆனால் ஆண்டவனிடத்திலிருந்து வரும் உண்மைகளையே அவர்கள் மனிதர்களுக்கு விளக்கிக்காட்டி அவ்வேதக் கட்டளையின் படியே தாங்களும் நடந்துவந் திருக்கிறார்கள். "தீமை யை விலக்கிக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு இப்புத்தகம் (திருக்குர்ஆன்) ஒருவழிகாட்டியா யிருக்கிறது என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை"—(அல்குர் ஆன், 2:2). "இப் புத்தகம் (குர் ஆன் ஷரீபு) எல்லாமகிமையும் ஞானமும்

நிறைந்த அல்லாஹுத் தஆலாவினிடத்தி லிருந்து இறக்கப்பட்டிருக்கிறது"—(அல்குர்ஆன், 46:2). "எனக்கு (எம்பெருமானுக்கு)வெளியாக்கப் பட்டதைத் தவிர வேறொன்றையும் நான் பின்பற்ற மாட்டேன், மேலும் வெளிப்படையாக நான் எச்சரிக்கைசெய்ய வந்தவனல்லாமல் வேறொன்றுமல்ல"—(அல்குர்ஆன், 46:9). "இவை ஞானம் நிறைந்த அப்புத்தகத்தின் (குர்ஆன் ஷரீபின்) திருவாக்கியங்களா யிருக்கின்றன."—(அல்குர் ஆன், 10:1). "மனிதர்களை நீர் அவர்களுடைய ரக்ஷகனது அனுமதியின் பிரகாரம் முழு இருட்டிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து சர்வமகிமையும் எல்லாப்புகழும் நிறைந்த அக்கடவுளுடைய சன்மார்க்கத்தில் சேர்ப்பிப்பதற்காக உமக்கு நாம் வெளியாக்கித் தந்திருக்கும் வேதமாக இது அமைந்திருக்கிறது"—(அல்குர்ஆன், 14:1). "மகா நிச்சயமாக மிக உன்னதமான நன்னடத்தைகளையே நீர் (எம்பெருமானார்) பின்பற்றுகிறீர்"—(அல்குர்ஆன், 68:4). இன்னும் அம்மகானின் அருமைப் பத்தினியாகிய ஆயிஷா (ரலி) அவர்கள், "அவருடைய குணாதிசயம் குர்ஆன் ஷரீபாகவே யிருக்கிறது" என்று எம்பெருமானின் தன்மையை வெகு நன்றாகச்சுருக்கி விளக்கி யிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வாக்கியங்கள் இன்னும் அநேக முண்டு. எமது திருவேதமாகிய குர் ஆன் ஷரீபு ஒரு வேதம் மட்டுந்தான் நாளிதுவரையில் மாறுபடாமல் சுத்தப்பரிசுத்தமா யிருந்து வருகிறது. ஏனெனின், இறைவனே இவ்வேதத்தைப் பாதுகாத்துக் கொடுப்பதாய் வாக்குறுதி செய்திருக்கிறான். "நிச்சயமாக நாம் அந்த ஞாபக மூட்டியாகிய அல்குர்ஆனை வெளியிட்டிருக்கிறோம், இன்னும் நாம் அதற்கு மகா உறுதியான பாதுகாவலனாயிருப்போம்"—(அல்

குர்ஆன், 15:9). எமது இணையற்ற திருமறை சென்ற 1300 வருஷங்களுக் கிடையில் ஓர் அக்ஷரமும் மாற்றப் படவில்லையென்பது உலகமறியக் கிடக்கும் உண்மையா யிருக்கிறது ; இவ்வுத்தம நித்திய வேதத்தில் சொல்லப் படாத விஷயம் ஒன்றுமே இவ்வுலகில் கிடையாதென்பது தும் எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். இப்படிப் பட்ட இணையற்ற வேதத்தை வெளிப்படுத்திக் கொடுத் தருளிய எம்பெருமானாரோ அவ்வுத்தம வேதமயமாகவே யிருக்கிறார்கள். இதனால் தான் எம்பெருமானார் மட்டுமே ஏனையோரைக் காட்டினும் எல்லாவித மனிதர்களுக்கும் ஏற்ற மாதிரியா யமைந்திருக்கிறார்கள் என்பது நம்பிக் கைக்குப் பொருத்தமாயிருக்கிறது.

5. கடைசியாக அப்பெரியார் உபதேசித்த விஷயங் களிலெல்லாம் அவருக்குச் சுயானுபவம் உண்டோவென்று ஆராய்ச்சி புரிதல் வேண்டும். மனிதர்கள் இவ்வுல கில் பல்வேறு படித்தரத்தில் காணப் படுவதால் அவர வருடைய நிலைமைக்குத்தக்கபடி அப்பெரியார் உபதேசம் புரியும்போதும் அவருக்கு ஒவ்வொரு படித்தரத்திலும் பரிச்சியம் உண்டோவென்று சிலர் சந்தேகிக்கலாம். அப் படி அவர்கள் சந்தேகிக்கத் தேவையில்லை. இப்படிப்பட்ட சுயானுபவம் எம்பெருமானாருக்கு அதிகமாயுண்டு. இவர் களுடைய ஜீவதிசையில் எத்தனை விதமான படித்தரம் ஏற்பட்டதோ அதைப்போல் இவ்வுலகில் வேறு யாருக் கும் உண்டானதில்லை. இவர்கள் எல்லாவிதப் படித்தரத்தி லும் உழன்றுவந்திருப்பதால்தான் இதரமதத் தலைவர்க ளெல்லாரைக் காட்டினும் எம்பெருமானார் எல்லாவித மனிதர்களுக்கும் ஏற்ற மாதிரியாக இருக்கிறார்கள். அதி பால்யத்தில் அகதியாயிருந்து ஆடு மேய்த்துப் பிறகு

சிறித்து காலத்துக்குள் சத்திய சீலம் நிறைந்து சரியான நியாயஸ்தராகி அல்அமீன் என்று எல்லாராலும் புகழப் பட்டார்கள். பிறகு எல்லா அரபிகளையும் போல் சிறிது காலம் ஒட்டகம் ஒட்டி வந்தார்கள்; அதன் பின் ஒரு பெண்மணியிடம் குமாஷ்தாவாகவும், அப்பால் தாமே முதலாளியாகவும் இருந்து அதற்கு மேல் நியாயஸ்தராக வும் தீரஸ்தராகவும் வேதபாரங்கதராயும் ஞானோப்தேசி யாயும் ஸ்திரீகளின் புருஷராகவும் குழந்தைகளின் தகப்ப னாகவும் வாளேந்திய வீரராயும் தாழ்விலாத் தளகர்த்தரா யும் சட்ட நிரூபணம் செய்பவராயும் தாமே அச்சட்டத் தை நடத்திக்காண்பிப்பவராயும் இருந்து இறுதியில் அரபு தேசமுழுமைக்கும் அரசராகவும் அமைந்தார்கள். இவை யெல்லாவற்றோடும் தாங்கள் தேவ கட்டளையைத் தினை யளவும் மீறிநடவாத தீர்க்கதரிசியாயுமிருந்தார்கள். எம் பெருமானார் உழன்று வந்த ஒவ்வொரு படித்தரத்திலும் உன்னதமான வெற்றியே யடைந்து வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் அவர்கள் செய்து வந்த செய் கை மனிதவர்க்கத்தாருக்கு என்றென்றைக்கும் ஒருசிறந்த வழிகாட்டியா யிருந்து வருகிறது. இஃதெல்லாம் சரித்தி ரக்காரர்கள் நன்குணர்ந்த சாதாரண உண்மையேயொழிய வேறில்லை; ஆனால் இதன் பூழுவிருத்தாந்தத்தையும் சொல்வதென்றால் அநேக கிரந்தங்கள் வேண்டும். ஒவ் வொரு நிலைமையிலும் அவர்கள் தவறாமல் அதி ஜாக்ரதை யுடன் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்களு டைய ஜீவதிசைமுழுதும் ஒரு குற்றமேனும் செய்ததில்லை; சாதாரண ஒரு வெள்ளைப் பொய்யேனும் விளையாட்டுக் காக வாவது சொன்னதில்லை. எவ்வகைத்தீங்கும் அவர் கள் எக்காலத்திலும் யாருக்கும் இழைத்ததே கிடையாது.

அவர்கள் எவ்வளவு கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் இருந்து கொண்டு மகா தயாளகுண சீலராயும் விடா முயற்சியையுடைய வீரராயும் உண்மையான நியாய வரம்பைக்கடவாத உத்தமராயும் சாத்மீகமான ஞானகுருவாகவும் சாந்தகுணமுள்ள தீரராகவும் இருந்து வந்திருக்கிறார்களென்பதை ஆதியோடந்தமாய் வருணிப்பதற்கு ஆயிரம் நா இருந்தபோதிலும் போதாது. மனிதர்களுடைய சகோதர உணர்ச்சியையும் சமத்துவ உணர்ச்சியையும் மற்றெல்லா மதத் தலைவர்களைக் காட்டினும் எவ்வளவு தூரம் இவர்கள் விருத்தி செய்திருக்கிறார்களென்பது சரித்திரக் காரர்களுக்கு நன்கு தெரிந்த விஷயம் தான். இன்னும் அடிமைகளின் நிலைமையையும் ஸ்திரீகளின் தன்மையையும் எம்பெருமானார் அதிக தூரம் முன்னேற்றத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இத்தனை பெருமையும் வாய்ந்த எம்பெருமானார் இன்னாரென்று உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் தான் அல்லாஹுத் தஆலாவின் அரிய நபியாகிய அஹ்மது முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்று சொல்லப்படுவார்கள். இவர்கள் தான் "மனிதருக்கேற்ற மாதிரி" யாயிருப்பவர்கள். இதனால் தான் அல்லாஹுத் தஆலா அவர்களைக் குறித்து, "எல்லா ஜாதியார்களுக்கும் ஒரு தயாளமாகவே யன்றி உம்மை நாம் அனுப்பவில்லை"—(அல் குர்ஆன், 21:107) என்று கூறுகிறான். இப்படிப்பட்ட எம்பெருமானார் "மனிதருக்கேற்ற மாதிரி" யாக இருக்கிறார்களோவென்று இன்னமும் பரிசீலனை செய்யும் பொருட்டு இதனடியில் அவர்களுடைய சில முக்கிய குணங்களை மட்டும் இக்காலத்திய இயல்புக்கு இணங்க ஆராய்ந்து பார்ப்போம்.

எம்பெருமானாரின் இகலோக வெற்றிகளுக்குள் மகா முக்கியமானது மனிதஜாதியாருக்குள் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அவர்கள் சந்தேக மில்லாமல் ஆணித்தரமாய் நிலை நாட்டியிருப்பதுதான். ஏக தெய்வக் கொள்கையையும்மனிதர்களின்சமத்துவ சகோதரத்துவத் தன்மையையும் எம்பெருமானார்தான் இவ்வுலகில் நன்றாக ஆணிவேர் ஊன்றும்படி நிலைக்கச் செய்திருக்கிறார்கள். பிர்மதேவனுடைய முகத்திலிருந்து சில முதன்மை பெற்ற மேலான ஜாதியார்கள் உற்பத்தியானாரென்றும் அத்தேவனது பாதத்திலிருந்து வேறுசில தாழ்மைபெற்ற கீழான மனிதர்கள்தோன்றினார்களென்றும்,வெள்ளையருக்குவேறு கடவுளென்றும் கருப்பு மனிதர்களுக்குக் கேவலமான மற்றொரு கடவுளென்றும் எம்பெருமானார் சொல்லவில்லை.ஜன்மபூமியின் வேறு பாட்டாலாவது ஜாதி நிறபேதத்தாலாவது ஒரு மனிதனுக்கும் மற்றொருமனிதனுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாய் எம்பெருமானார் சொல்லவே யில்லை. அவர்கள் அபிப்பிராயத்தில் உலகத்திலுள்ள எல்லாமானிடரும் ஒரே ஜாதிதான். குணவிசேஷத்தில் எவனொருவன் மகா சிலாக்கியனாயிருக்கிறானோ அவனே கடவுளுடைய சன்னிதானத்திலும் மேன்மைபெறுவானென்பது எம்பெருமானின் உபதேசமாகும். அவர்களுடைய தெய்வம் அரபு நாட்டுக்கு மட்டும் உரியதன்று; சர்வலோகங்களுக்கும் ரக்ஷண்யகர்த்தனே (ரப்பில் ஆலமீனே)' அவர்களுடைய இறைவனாகும். நவீன நாகரீகமுடையவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் மேல்நாட்டார் எத்தனை சர்வதேச சங்கங்களை ஸ்தாபித்தபோதிலும் எத்தனை மத்தியஸ்தக்கோர்ட்டுகளை உண்டாக்கிக்கொண்டபோதிலும் எம்பெருமானுடைய சகோதர உணர்ச்

சிக்கும் சமத்துவ உணர்ச்சிக்கும் முன்னால். அவர்களெல்லோரும் எள்ளளவும் ஈடாகமாட்டார்கள். இந்த இருபதாவது நூற்றாண்டில் அந்த வெள்ளையர்களுக்குள் ஒரு தீர்க்கதரிசி தோன்றக் கூடுமாயின் அவ் வெள்ளைத் தீர்க்கதரிசி தம்முடைய வெள்ளைக் கடவுளின் ஆதரவை நம்போன்ற கருநிறமாக்களுக்கும் அளிப்பரோ என்பதுதான் சந்தேகம். ஒருகால் அந்த வெள்ளைத் தீர்க்கதரிசி அதிக தயாளத்துடன் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள கருப்பு மனிதர்களுக்கு வேறொரு "கருப்புக்கடவுளை" (Black God) ஏற்படுத்தக்கூடும். எவ்வாறாயினும் தம்முடைய "வெள்ளைச்சாமி" யில் நமக்குப் பங்குக் கொடார்.. வெள்ளையர்கள் கருப்பு மனிதர்களிடம் சதாது வேஷம் பாராட்டுவதால் தான் சர்வலோக தயாபரனாகிய சாக்ஷாத் ரப்பில்ஆலமீன் மேல் நாடுகளில் யாரையும் தீர்க்கதரிசியாய் இது வரையில் அனுப்பவில்லைபோலும். ஒழுங்கான சன்மார்க்க நடைதான் உயர் பதவியை யளிக்குமென்று எம்பெருமானார் கூறினார்களே யொழிய தேவாலயத்தில் தனிகர்களெல்லாரும் பஞ்சணையிலும் ஏழைகளெல்லாரும் வெறுந்தரையிலும் உட்கார்ந்து பூஜை செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. வெள்ளையர் தொழும் ஆலயத்தில் கருப்பு மக்களுக்கு இடமில்லையென்று அவர்கள் சொல்லவில்லை. வெள்ளையரும் கருப்பரும் வேதியரும் ஊழியரும் அரசரும் அடிமையும் தனிகரும் தரித்திரரும் எல்லாரும் எமது இஸ்லாத்தில் ஒரே சமம்தான். பள்ளிவாசலில் தொழுகைக்கு நிற்கும்போது எல்லா மனிதர்களும் வேறுபாடியல்லாமல் தோளோடுதோள் இணையும்படி வரிசை வரிசையாய் நிற்கவேண்டும். இது மட்டுமன்று; இன்னும் எமது திருநபியவர்கள், "சீழ் ஒழு

கும்படியுான புண்களையுடைய தலையுடன் ஒரு நீகிரோவன் உங்களுக்கு மேலதிகாரியாக நியமிக்கப் பட்டுவிட்டாலும் அவன் சொல்லைக் கேட்டுக் கீழ்ப்படியுங்கள்," என்று கூறியுள்ளார்கள். மற்ற மனிதர்களைக்காட்டினும் உயர்ச்சியைக் காட்டக்கூடிய ஒரு செய்கையையும் எம் பெருமானார் செய்ததில்லை; அப்படிப்பட்ட வார்த்தையை யாவது அவர்கள் எப்போதும் சொன்னதில்லை. மகா உன்னதமான குணவிசேஷங்களையுடைய எம்பெருமானார் பதினாயிரக் கணக்கான சிஷ்யர்களுக்கு வேதாசாரி யாராக வும் ஞான குருவாகவும் விளங்கிவந்தபோதிலும், "உங் களைப்போல் நானும் ஒருசாதாரண மனிதன்தான்" என்று அடிக்கடி அவர்கள் சொல்லிவருவார்கள். மனிதர்களின் கூட்டத்தில் எமது நபிகள் நாயகம் கலந்து நிற்கும்போது அவர்களுடைய நடை உடை பாவனையெல்லாம் சர்வசா மானியமாயிருப்பதால் அயலூரிலிருந்துவரும் எவரும், "உங்களில் யார் முஹம்மது (ஸல்)?" என்று கேட்பாராம். மகத்தான அதிகாரத்தைவகித்தவர்போல்பார்ப்பவருக்குத் திகிலுண்டாகும்படி அவர்கள் ஒருபோதும் இருப்பதில்லை. எமது நபிபிரான் நியாயவிஷயத்தில் தமக்கும் தம்முடைய முக்கிய சகபாடியான உமருக்கும் (ரலி) வேறொரு அன் னியனான எஹூதிக்கும் இடையில் வித்தியாசம் பாராட்டு வதில்லை. ஒரு எஹூதிக்கு எமது பெருமானார் கொஞ்சம் கடன் கொடுக்கவேண்டியிருந்தது; அந்தயூதன் தனக்குச் சேரவேண்டிய கடனைக் கேட்க வந்தபோது வித்தியாச மாகத்திட்டி நபிநாயகத்தின் கழுத்தில் தன் தலைப்பாகை யின் துணியைப்போட்டு முறுக்கினான்; உடனே உமரே பாரூக் (ரலி) கோபாவேசம் மூண்டு அந்தயூதனைத்திட்டி அவன் தலையைக் கொய்வதற்கு அனுமதிகேட்டார்கள்.

அவர்களுக்கு என்ன பதில் கிடைத்தது? "உமர்! அப்படிச் செய்வது நியாயமல்ல. நீர் அந்த யூதனைத் திட்டுவதை விடுத்து அக்கடனைக்கொடுத்து விடும்படி எனக்குப் புத்தி மதிசொல்லி யிருக்கவேண்டும்; இல்லையேல் அந்த எஹூதியை இன்னும் சிறிது சாந்தமாய் நடக்கும்படி இன் சொல்லால் சமாதானம் செய்திருக்கவேண்டும். இப்பொழுதே என் கடனையுந் தீர்த்து எஹூதியைத் திட்டினதற்குக் கொஞ்சம் பணமும் சேர்த்துக் கொடுப்பீராக," என்று சாந்தகுண சீலராகிய எமது திருநபியவர்கள் உமரே பாரூக்கை (ரலி)க் கண்டித்தார்கள். யூதனாயிருந்தபோதிலும் ஒரு மனிதனுடைய பிறவிச் சுதந்தரத்தைக் கெடுப்பது கூடாது என்று எம்பிரான் சொன்னார்கள். அவர்களுடைய அபிப்பிராயப்படி எல்லா மனிதர்களும் கடவுள் முன்னிலையில் சமம்தான்.

எமது பெருநபியவர்களின் இன்னுமொரு விசேஷ குணத்தையும் இங்கே ஆராய்ச்சி செய்வோம். எம்பெருமானார் யுத்த வீரராயிருந்ததோடு மகா தருமம் நிறைந்த சுத்த வீரராகவும் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய ஜீவதிசை முழுவதும் ஒரு முறையேனும் அக்கிரமச் சண்டைசெய்ததே கிடையாது. எஹூதிகளாலும் காபிர்களாலும் முதலில் தாக்கப்பட்டபின்னரே எம்பெருமானார் இஸ்லாத்தின் தற்காப்புக்காக முதலில் எல்லா வேலையும்செய்து பார்த்துக் கடைசியாக வாளையெடுப்பது வழக்கம். தர்மயுத்தத்துக்குவேண்டிய எல்லா முறைகளையும் எம்பெருமானார் அதிககவனமாக அனுஷ்டித்து வந்தார்கள். இவர்களுடைய சண்டை முகாமிலிருந்து எதிரிகளிருக்கும் இடத்துக்கு ஒருநீருற்று ஓடுகின்றது; அதன் ஜலத்தை மறிக்கக்கூடாதென்று தங்கள் தோழர்களுக்கு உத்தரவு செய்கிறார்கள்.

எதிரிகளுக்கு உதவக்கூடா தென்று எம்பெருமானார் நீர் நிலைகளில் பாஷாணத்தைக் கரைக்கச் சொல்வதில்லை. எதிரிகளின் கண்ணைக் கெடுக்கக்கூடிய விஷப்புகைகளை அவர்கள் உபயோகிப்பதில்லை. உடன்படிக்கைகளை வெறுங் காகிதமென்று அவர்கள் ஒருபோதும் சொன்னதே கிடையாது. சுருங்கச் சொல்லுமிடத்து அதர்மயுத்தம் செய்ய அவர்கள் ஒருபோதும் கனவிலும். கருதினதில்லை. இந்த இருபதாவது நூற்றாண்டில் நாகரீகதேசமென்று சொல்லும் இடங்களில் காணப்படக் கூடியயுத்த அநாசாரங்களெல்லாம் எமது நபிபெருமானாருக்குத் தெரியா. ராணுவச்சட்ட அமுலும் அடக்குமுறைச் சட்டங்களும் அமுக்குமுறைச் சட்டங்களும் அப்பெருமானாருக்குக் கிஞ்சித்தும் தெரியா. தோல்வியடைந்தவர்களையும் துன்பப் பட்டவர்களையும் மார்பினால் நகர்ந்துசெல்லும்படி செய்யத் தக்க மகா நாஸுக்கான (?) தண்டனையை எமது திருநபியவர்கள் அறிந்ததில்லை. முஸ்லிம்களுக்கு மட்டுமே இவ்வுலகம் சொந்தமென்றும் ஏனையோரையெல்லாம் எமலோகம் அனுப்பிவிடவேண்டுமென்றும் அவர்கள் ஒரு போதும் சொல்லவில்லை; யுத்த நஷ்டமொன்றும் தோல்வியடைந்தவரிடத்தில் அவர்கள் வசூல் செய்வதில்லை. சர்வதேச சங்கமென்று ஒன்று அவர்கள் ஏற்படுத்திக்கொண்டு அதினின்றும் அதிகாரப் பத்திரம் பெற்று அதன் வியாஜத்தால் அன்னியர்களை அடக்க முயன்றதில்லை. இதெல்லாம் 20-வது நூற்றாண்டின் நாகரீகம் (?). யுத்தகாலத்தில் ஒரு வாக்குறுதி அவர்கள் கொடுப்பார்களாயின் வெற்றியடைந்த பின் தங்களுக்குவேண்டிய வண்ணமாக அதை மாற்றிக் கொள்ளும் திரிசமம் அவர்களுக்குத் தெரியாது. சுமார் 12-வருஷங்களுக்கு அதிகமாக எம்பெருமானாருக்கு இ

வும் பகலும் இடைவிடாமல் சகிக்க முடியாத துன்பங்களை யெல்லாம் செய்துவந்த எதிரிகள் மக்கா ஷரீபில் கடைசியில் தோல்வியடைந்து தலைகுனிந்து வெட்கத்துடன் மௌனஞ்சாதித்து நின்றபோது அந்தவிஷமிகளை எம்தயாளமூர்த்தி என் செய்தாரென்று உங்களுக்குத் தெரியுமா? எல்லோரையும் அடியோடு மன்னித்துவிட்டார்கள்; இஃதென்ன ஆச்சரியம்! 10,000 தோழர்களுடன் நபிகள் நாயகம் மக்காஷரீபுக்குச் சென்று அந்நகரை ஒருவித உபத்திரவமும் செய்யாமல் கைக்கொண்ட அந்நாளில் எமது திருநபியவர்கள் கஅபத்துல்லாவின் கதவுநிலைகளைப் பிடித்துக் கொண்டு, "நான் உங்களை என்னவிதம் நடத்தப்போகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று குரைஷ் குலக்காபிர்களை நோக்கிக் கேட்டபோது, "ஒரு கண்ணியமான சகோதரனிடத்திலிருந்தும் ஒரு கண்ணியமான சகோதரனது புத்திரனிடத்திலிருந்தும் எதிர் பார்க்கக் கூடிய நன்மையையே எதிர் பார்க்கிறோம்," என்றார்கள். அதற்கு எம்பெருமானார், " 'இன்றைக்கு உங்களுக்கொன்றும் நிந்தனையில்லை,' (அல்குர்ஆன், 12:92) என்று என் சகோதரர் யூஸுபு (அலை) சொன்னதுபோல் யானும் சொல்கிறேன்," என்று மறுமொழி கூறினார்கள். திருமக்காஷரீபு எம்பெருமானுடைய கைக்கு வந்தபோது இரத்தப் பழியொன்றும் நிகழவேயில்லை. தோல்வியடைந்தவர்களிடத்தில் ஒன்றும் தண்டத்தொகை வசூலிக்கவுமில்லை. இப்பேர்ப்பட்ட குணாதிசயங்களுடன் இருந்தவர்கள்தான் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்.

மனிதர்கள் தங்களுடைய அபார அந்தரங்க சக்தியையுணர்ந்து அளவு கடந்த வெற்றியை அடைவதற்குத்

தகுந்த வண்ணமாக அவர்களுக்கு எம்பெருமானுர் உத்சா கத்தைக் கொடுத்திருக்கிருர்கள். மனிதர்களுடைய சுபா வத்துக்கேற்றமாதிரியான லக்ஷியத்தை யெல்லாம் அவர் கள் அமைத்துக் கொடுத்திருக்கிருர்கள். அந்த லக்ஷியம் நிறைவேறுவதற்கு வேண்டிய வழிகளும் அநந்தமென்று காட்டியிருக்கின்றுர்கள். இதுவரையில் வேறு யாராலும் வெளியிடப்படாத அவ்வளவு தூயவேதத்தையும் மனிதர் களுக்கு நல்வழிகாட்டும் பொருட்டு இறக்கித் தந்திருக்கி ருர்கள். இவை யெல்லாவற்றிற்குமேல் கடைசியாக அப் பெருமானுருடைய ஜீவிய சரித்திரமும் நமக்கொரு வழி காட்டியாயிருக்கிறது. ஆதலின் எம்பெருமானுரை "மனித ருக்கேற்றமாதிரி" யென்று சொல்வதில் ஏதேனும் தடை யுண்டோ? ஆதலின், "அல்லாஹுத் தஆலாவின் ரஸூலி டத்தில் நிச்சயமாக உங்களுக்கு ஒரு நேர்த்தியானமாதிரி யிருக்கிறது," என்றும், "எல்லாஜாதியார்களுக்கும் ஒரு தயா ளமாகவே யன்றி உம்மை நாம் அனுப்பவில்லை," என்றும் ஆண்டவன் சொல்வது மிகையாகமாட்டாது. "எல்லா நபி மார்களும் சந்தேகமின்றி இயற்கையாகவே பரிசுத்தமுள் ளவர்கள்தான்; ஆனுல் அஹ்மது (ஸல்) மட்டும் அவர்க ளெல்லாரைக் காட்டினும் மகா பரிசுத்த முள்ளவர்கள்," என்றொரு பெரியார் வருணித்திருக்கிருர். இஃது உண் மையே.